உ

கடவுள் துணை.

நாட்டுச்செல்வருக்கு

நல்வழிகாட்டும்

நன்னெறிக்கும்மியும்,

லாக்காஸ்பத்திரிகும்மியும்

அடங்கியிருக்கின்றன.

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

நாட்டுச்செல்வருக்கு

நல்வழிகாட்டும் நன்னெறிக்கும்மி.

முதற்பாகம்-நூன்முகம்.

கள்ளுசாராயம்குடியாதே அபின்
கஞ்சாவெறியால் மயங்காதே
உள்ளமயங்கிடும் கண்ணுஞ்சிவந்திடும்
ஒட்டாண்டியுமாவாய் மானிடனே. க

கொஞ்சங்கொஞ்சமாய்க் குடித்திடுவாய்பின்
கூடும்பொருளை யழித்திடுவாய்
மிஞ்சிகடன்களும் வாங்கிடுவாய்நல்ல
மேனிமெலியுமே மானிடனே. ௨

வார்த்தைகுளறிடும் வாயதுநாறிடும்
வம்பானவார்த்தைகள் பேசச்சொல்லும்
பார்த்தவர்கெட்டகுடிக்காரனென்றுனைப்
பங்கமாய்ச்சொல்லுவார் மானிடனே. ௩

நித்தம்நினைப்பாகவேயிருக்கும் சற்று
நேரம்குடியா திருந்துவிட்டால்
பித்தம்பிடித்தவன் போலிருக்கும் கெட்ட
பிரம்மையுண்டாகுமே மானிடனே. ௪

மேடுபள்ளமென்றும் காணுதுகெட்ட
மூத்திரம்நரகலும் தோணுது
சாடும்தடுமாறி தள்ளாடிவீழ்ந்து
சவம்போல்கிடப்பாயே மானிடனே. ௫

தள்ளாடிதத்தி நடக்கச்சொல்லும்வீணில்
சண்டைகள்போடவும் தூண்டிவிடும்
சொள்ளையிலடித்து டாணுவில்கொண்டுபோய்
துளையில்மாட்டிடும் மானிடனே. ௬

நெஞ்சுமுலர்ந்திடும் மூளைவரண்டிடும்
நேசமும்பாசமு மற்றுவிடும்
பஞ்சையாயெங்குமே பேசச்செய்யுமத்தால்
பவுசும்போய்விடும் மானிடனே. ௭

அசுரர்குருவான சுக்கிராச்சாரி
ஐயோமதுவை குடித்ததனால்
நசியவயிறு கிழியலானதை
நாடெங்குஞ்சொல்லுவார் மானிடனே. ௮

ஆணுவமாகத்திரியாதே சூது
ஆடும்விடந்தனில் போகாதே
தோணவேகற்றுநீ கொள்ளாதேயதின்
தொல்லையைகேழ்ப்பாயே மானிடரே. ௯

பக்கத்திலும்நின் றுபாராதே சொர்ப்ப
பந்தயம்கட்டியு மாடாதே
ரொக்கப்பணம்சில தோற்றுவிட்டால்பொல்லா
ரோஷங்களாகுமே மானிடனே. ௧0

விட்டபணத்தை பிடிக்கநாடியய்யோ
மின்னும்பின்னும்வைத்து ஆடிடுவாய்
பெட்டிபணத்தை யிழுத்துகொள்ளும்கெட்ட
பேய்போலலைவாயே மானிடனே. ௧௧

எவ்வளவுபணம் வைத்தாலும் ஆட
ஏக்கமும்துக்கமும் அல்லாமல்
அவ்வளவுபணம் தோர்த்திடிலும்கடன்
ஆரையும்கேழ்ப்பாயே மானிடனே. ௧௨
கடன்கொடுக்கவே நாடார்களுன்னை
கண்டவர்பேசவும் மாட்டார்கள்
திடமுடன்பெட்டிதானுடைத்துப்பொருள்
திருடச்சொல்லுமே மானிடனே. ௧௩
பெட்டியுடைத்து திருடச்செய்யும்அதை
போலீசார்கண்டு பிடிக்கச்செய்யும்
கட்டியடித்து விலங்கிடும்வேளையில்
கஸ்திப்படச்செய்யும் மானிடனே. ௧௪
நாடாண்டதர்மன் நளனுமிச்சூதாலே
நாடுநகரமும் தோற்றுவிட்டு
காடேகதியா யலைந்தகதைகளைக்
காதினல்கேட்டறி மானிடனே. ௧௫
சூதினல்கெட்டவர் மெத்தவுண்டு அந்த
துன்பத்துக்கு இடம்வையாமல்
சூதைவிலக்கென்று ஔவைநீதிசொன்ன
சொல்லையும்நம்புவாய் மானிடனே. ௧௬
எல்லாதொழிலும் செய்திடலாம்சற்றே
ஏறக்குறைய நடத்திடலாம்
பொல்லாதசூதை விரும்பினல்மண்ணில்
போகுமேவாழ்வெல்லாம் மானிடரே. ௧௭

முற்பாதி-முற்றிற்று.

மண்டலத்துமானிடர் மதிமையக்கும்
லாக்காஸ்பத்திரிகும்மி - பிற்பாதி-நான்முகம்.

மாதர்வலைக்குள்ளே செல்லாதேகெட்ட
வார்த்தைகளைப்பேசி வெல்லாதே
பாதகிதோதகி போதனைகளெல்லாம்
பகர்வேன்கேட்பாயே மானிடனே. கஅ

கூழுக்குப்பில்லாத பாதகியும்கஞ்சி
குடிக்கவோடில்லா மூதேவியும்
தாழப்படுத்து யுருண்டவளும் மிக்க
சண்டியும்கள்ளியு மானிடனே. ககூ

மஞ்சள்குளித்து மினுக்கிடுவாள்மிக
மணங்கள்பூசி குலுக்கிடுவாள்
கொஞ்சியேமுத்தமுந் தந்திடுவாள்கெட்டக்
கொள்கையைக்கண்டறி மானிடனே. உ0

மல்லிகைமுல்லை யணிந்திடுவாள்சிறி
வட்டமாய்ப்பொட்டுமே யிட்டுக்கொள்வாள்
மெல்லியசல்லா வுடுத்திக்கொள்வாள்மிக
வேடிக்கைக்காட்டுவாள் மானிடனே. உக

நித்தியமும்ஸ்தானம் செய்திடுவாள்சற்று
நேரமொருசீலை கட்டிக்கொள்வாள்
எத்திப்பறிக்க யுரைத்திடுவாள்ஐயோ
யேமாந்துபோகாதே மானிடனே. உஉ

அம்மாஅக்காளென்றம்கூப்பிடினும்பாவி
அண்டிபரியாசம் செய்திடுவாள்
சும்மாஅடிக்கடி வந்திடுவாளுன்னை
தொல்லைக்குளாக்குவாள் மானிடனே. உங

பல்லுவிழுந்த கிழவிஐயோசிறு
 பையனைமாப்பிள்ளையாகக்கொண்டு
 அல்லும்பகலுஞ் சிங்காரஞ்செய்கின்றதை
 அறிவாயோசாற்றும் மானிடனே. உச

பாலிலேசத்தியம் செய்திடுவாள்உண்ணும்
 பருக்கைமீதி லடித்திடுவாள்
 கோவிலில்முன்சென்று முறுதிசொல்வர்ளதைக்
 கொஞ்சமும்நம்பாதே மானிடனே. உரு

அய்யாவேகொப்பு ஜிமிக்கியென்பாள்எங்கள்
 அத்தாபனமூக்குத்தி நத்துயென்பாள்
 கையிற்குத்தங்க வளையலென்பாளதை
 கண்டுதெளிவாயே மானிடனே. உசா

சிங்கத்தலைக்காப்பு தோடாவென்பாள்என்றன்
 சீமானேகோமானே யாழிஎன்பாள்
 தங்கச்சரடுகள் வேணுமென்பாளதைத்
 தராவிடில்பேசாள் மானிடரே. உஎ

கல்லிழைத்தநகை வேணுமென்பாள்எந்தன்
 கர்த்தாவேநல்லதாய் வாங்குமென்பாள்
 பல்லையுங்காட்டி பசப்புவாள்சொல்லைநீ
 பட்சமென்றெண்ணாதே மானிடனே. உஅ

வாங்கியகடன்கள் தீராவிட்டால்ஐயோ
 வாரண்டுசெம்மனும் வந்துவிட்டால்
 பாசாங்குசெய்வாளென் றெண்ணாதேயுன்றன்
 படுக்கையைக்காட்டுவாள் மானிடனே. உகூ

காசம்புகழையும் வாங்கிக்கொள்வாள்பெறும்
கட்டியும்புண்ணையுந் தந்திடுவாள்
நாசமடையவே பாராதேயெந்நாளும்
நல்வழிச்சாருவாய் மானிடனே. ௯0

காசமிருமலும் வந்திடுமேகெட்ட
கண்டமாலைசூலை வந்திடுமேகெட்ட
கூசடாகுச்சுக் காரிகளினாசையைக்
கொள்ளாதே சற்றும்நீமானிடனே. ௯௧

நீர்க்கடுப்பும்வெள்ளை கண்டிடுமேமிக
நெஞ்செல்லாம்வற்றி யுலர்ந்திடுமே
பார்மீதில்குச்சுக் காரிகளின்பாசத்தைப்
பாழாக்குவாய் திவ்யமானிடனே. ௯௨

வீரம்பூரம்ரசம் திண்ணவேவாய்த்திடும்
வீங்கியேகால்கையும் சோர்ந்துவிடும்
சோரம்போகாதேநீ கற்புள்ளகன்னியைச்
சோபனஞ்செய்குவாய் மானிடனே. ௯௩

மூத்தவளோடுநீ சேராதேபொல்லா
மூதேவியுன்னைத் தொடர்ந்துகொள்வாள்
ஆத்திரங்கொண்டுநீ பேசாதேயுன்றன்
ஆபளுங்குன்றுமே மானிடனே. ௯௪

தாய்போலமாதரைத் தேடாதேதம்பி
தமையன்பெண்டோடுஞ் சேராதே
நாய்ப்போலேநாடி யலையாதேபொல்லா
நமன்கொண்டோடுவான் மானிடனே. ௯௫

சந்திரன்கெட்டதும் பெண்ணாலேதேவர்
தாருகாவிட்டதும் பெண்ணாலே
இந்திரன்திரேகம் முழுவதும்வின்னமாய்
போனதும்பெண்ணாலே மானிடனே. ௩௬
கோவிலன்கெட்டதும் பெண்ணாலேதவம்
கோசிகன்விட்டதும் பெண்ணாலே
ஆவல்தவஞ்செய்த பத்மாசூரன்
அழிந்ததும்பெண்ணாலே மானிடனே. ௩௭
சண்டையுந்தெண்டமும் பெண்ணாலேகுத்து
தட்டுவெட்டுதிட்டம் பெண்ணாலே
மண்டையுடைவதும் தூக்கிலேநிற்பதும்
மங்கையாலல்லவோ மானிடனே. ௩௮
எத்தனைபேர்களோ பெண்ணாலேகெட்டது
எண்ணவெழுத முடியாதே
பத்தினியாகிய கலியாணமாதரின்
பட்சத்தைப்பாராட்டாய் மானிடனே. ௩௯
பாவிக்கழிக்கும் பொருளையெல்லாம்சேர்த்து
பாதையில்மடமு மல்லாமல்
கோயில்குளங்களைச் செய்துவைத்தால்யாரும்
கொண்டாடுவாரேநல் மானிடனே. ௪௦
சிந்தைவருந்திப் பொருளைத்தேடியிந்தச்
சீர்கெட்டமாதர்க் கழிக்காமல்
நந்தவனங்கள் குளங்களைக்கட்டினல்
நற்பதவிதரும் மானிடனே. ௪௧
பிற்பாதி-முற்றிற்று.